**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் - பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர் நலத் திட்டங்கள்-- வேலை வாய்ப்பு பயிற்சி திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் பயிற்சி திட்டங்களுக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்(சிந2) நலத்துறை**

அரசாணை நிலை எண்.89 நாள்: 10.08.2000

திருவள்ளுவர் ஆண்டு 2031.
விக்கிரம, ஆடி 26.
படிக்க:

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கடித எண்.சி1/5568/2000, நாள் 30.5.2000.

அரசாணை நிலை எண்.57, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 1.6.2000.

- - - - -

ஆணை:

பிற்படுத்தப்பட்டோர், ,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர் வேலை வாய்ப்புப் பயிற்சி திட்டங்களின்கீழ் பயன் பெற பயனாளிகளின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.25,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்துவதற்கான கருத்துருவை பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அனுப்பியுள்ளார். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் அளிக்கப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் பயனடைவோரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் பலவித நிலைகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் இதனை ஒரே சீரானதாக உயர்த்தி நிர்ணயம் செய்து உத்தரவிடும்படி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுள்ளார்.

2) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் நலத்திட்டங்களில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலை வாய்ப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. கணினிப் பயிற்சி.
2. கணினிப் பயிற்சி(சிறப்புப் பாடத் திட்டம்)
3. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி.
4. தானியங்கி பொறியியல்.
5. குளிர்சாதன/குளிர்பதனப் பெட்டி பழுதுப் பார்த்தல்.
6. அலங்கார ஆடை வடிவமைப்பு.
7. ஆடை தயாரிப்பு.

8. கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல்
9. துணை செவிலியர்.
10. பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல்.
11. தோல் பொருட்கள் தயாரித்தல்(குறுகிய கால பயிற்சி).
12. தோல் பொருட்கள் தயாரித்தல்(நீண்ட காலப் பயிற்சி).
13. தையல் இயந்திரம் இயக்குதல்.
14. அலுவலக செயலர் பயிற்சி.
15. தட்டச்சுப் பயிற்சி.
16. சுருக்கெழுத்து பயிற்சி.
17. தொலைபேசி இயக்குதல்.
18. தகவல் தொழில் நுட்பம்.
19. பிளாஸ்டிக் உற்பத்தி தொழில் நுட்பவியலில் சிறப்பு பயிற்சி.
20. மருத்துவ சோதனைக்கூட தொழில் நுட்ப பயிற்சி.

3) இப்பயிற்சிகளில் அலங்கார ஆடை வடிவமைப்பு, ஆடை தயாரிப்பு மற்றும் கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல் ஆகியவற்றில் பயிற்சி பெற பயனாளியின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/- என வரம்பு நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மற்ற இனங்களிளில் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.25,000/- ஆகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் சலுகைகள் பெற்றிட மாணவ/மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.25,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி பார்வை இரண்டில் உள்ள அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

4) பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்முறையில் பரிசீலித்து ஏற்றுக் கொண்டுள்ளது. இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை திட்டம், விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கை, வேலை வாய்ப்பு பயிற்சி திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வரும் பயிற்சியான "பேஷன் டெக்னாலஜி" ஆகியவற்றிற்கு பயனடைவோரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 50,000/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இத்துறையின் மூலம் நடத்தப்படும் அனைத்து வேலை வாய்ப்பு பயிற்சி திட்டங்களில் பயனடைவோரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பை ரூ.25,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி அரசு ஆணை யிடுகிறது.

5) இந்த அரசாணை நிதித்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.523/ ஷிஷி(நிக்ஷி)/2000, நாள் 8.8.2000 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலர்.

பெறுநர்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநில கணக்காயர்(தணிக்கை.1), சென்னை-18(பெயரில்).
மாநில கணக்காயர்(தணிக்கை.2), சென்னை-35(பெயரில்).
மாநில கணக்காயர்(தணிக்கை.2), சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம். சென்னை-9.

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது